| 05 | கணக்கீடு<br>அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்<br>தரம் 12<br>**கணக்கீட்டு எண்ணக்கருக்கள்** |
|---|---|

# பகுதி 1

01) பின்வரும் சந்தர்ப்பங்களில் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கரு யாது?

1. நிதிநிலமைக் கூற்றில் எல்லாப்பெறுமதிகளும் காசுப்பெறுமதியில் காட்டுதல் - ……………..
2. நிதிநிலமைக்கூற்றில் ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் பெறுமதிகளில் காட்டுதல் - ………….
3. சொத்துக்களை சந்தைப் பெறுமதியை குறிப்பிடாமலிருத்தல் - ……………………..
4. மொத்த இலாபத்தைக் கணிப்பிடும் போது இறுதியிருப்பு பெறுமதியை காட்டுதல் - ……………………..

02) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு என்பதைக் விளக்குக.

03) வியாபார வருமதி மற்றும் வியாபார சென்மதியை அறிந்துகொள்ள முக்கியமாக தேவைப்படுகின்ற கணக்கீட்டு எண்ணக்கரு.

1. தொடர்ந்து இயங்குதல் எண்ணக்கரு
2. அட்டுறு எண்ணக்கரு
3. தேறல் எண்ணக்கரு
4. கால அளவீட்டு எண்ணக்கரு
5. பாதுகாப்பு எண்ணக்கரு

04) சொத்துக்களின் பெறுமானத் தேய்வுடன் தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கரு 3 ஐக் குறிப்பிடுக.

05) வரையறுக்கப்பட்ட ABC பொதுக்கம்பனி ← 01
2020.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று.
↑
02

| | | 05 → (000) |
|---|---|---|
| விற்பனை ← 03 | | 100 000 |
| கழித்தல் - விற்பனைக்கிரயம் ← 04 | | 45 000 |
| மொத்த இலாபம் | | 55 000 |

BUSINESS & COMMERCE BRANCH

பின்வரும் சந்தர்ப்பங்களுக்குரிய கணக்கீட்டு எண்ணக்கரு யாது?

06)

1. மூலதனம் + பொறுப்பு = சொத்து எனும் கணக்கீட்டு சமன்பாட்டை உருவாக்குவதற்கு …………………….. என்ற எண்ணக்கரு தொடர்புடையது.
2. மொத்த இலாபத்தைக் கணக்கிடும் போது இறுதி இருப்பை இணைப்பது ………………. எண்ணக்கரு அடிப்படையிலாகும்.

07) பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருவிற்கு ஒவ்வொரு உதாரணத்தைத் தருக

1. தோற்றத்திலும் பார்க்க கருத்து எண்ணக்கரு
2. பொருண்மை எண்ணக்கரு
3. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு
4. அட்டுறு எண்ணக்கரு

08) வியாபார வருமதிகளின் மதிப்பு குறைப்பு ஏற்பாட்டுக்கான கணக்கீட்டு எண்ணக்கருவானது

1. கொள்கை மாறா எண்ணக்கரு
2. தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு
3. பாதுகாப்பு எண்ணக்கரு
4. தேறல் எண்ணக்கரு
5. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு

09) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட சொத்தை நிதிநிலமைக்கூற்றில் காட்டுவது தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கருவானது.

1. இணைதல் எண்ணக்கரு
2. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கிய எண்ணக்கரு
3. வெளிப்படுத்தல் எண்ணக்கரு
4. கால அளவீட்டு எண்ணக்கரு
5. பண அளவீட்டு எண்ணக்கரு

10) பினவரும் கூற்றுக்களுள் சரியான கூற்றாக அமைவது.

a) விற்பனையை விற்பனைக்கிரயத்துடன் இணைத்துக்காட்டுவது இணைத்தல் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும்.
b) வணிகம் அதன் உரிமையாளரிடமிருந்து வேறுப்பட்ட தனிப்பட்ட அலகாகும்.
c) எதிர்பார்க்கப்படும் நட்டங்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது பாதுகாப்பு எண்ணக்கருவின் அடிப்படையிலாகும்.

d) a , b

e) a , b , c அனைத்தும்

f) b , c

g) c மட்டும்

h) a மட்டும்

BUSINESS & COMMERCE BRANCH